உ

சிவசண்முகன்றுணை.

கங்காபவானிக்கு

இலக்ஷுமிதேவி திருவாய்மலர்ந்தருளிய

இலக்ஷணக்குறவஞ்சி.

இஃது.

ஸ்ரீ-காஞ்சிமாநகருக்கடுத்த பளப்பாக்கத்தில்வசிக்கும்

செங்குந்தர்சிகாமணியாகியும்

இயலிசைநாடகத்திற்சிறந்தவராகியுமிலங்கும்

பொன்னம்பலமுதலியார்குமாரர்

முனியப்பமுதலியார்

அவர்களால் - இயற்றியதை.

கோகுலாபுரம்

அருணாசலமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.

திருத்தணிகையைச்சார்ந்த

சத்திரவாடிமுதலியகாட்டிலுள்ள

செங்குந்தர்மரபினற்குரியசிலகனவான்கள்

வேண்டுகோளின்படி-

ஷ - வித்வான்குமாரர்

சிதம்பரமுதலியாரால்

கோணார்

மாணிக்கமுதலியார்

கம்பேனியாரவர்களது

மனோன்மணிவிலாசவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விஷு௵ தைமீ.

உ

கடவுள் துணை.

விளம்பரம்.

இதனாற் சகலருக்குந் தெரிவிப்பதியாதெனில் காஞ்சிமாநகருக்கடுத்த பனப்பாக்கத்தில் வசிக்கும் செங்குந்தர்சிகாமணியாகிய-வித்வான்-முனியப்பமுதலியாரவர்களாலியற்றிய ஸ்ரீகிருஷ்ணவிலாசம் இலக்ஷணக்குறவஞ்சி என்னும்-இவ்விரண்டும் தணிகையம்பதியைச்சார்ந்த சத்திரவாடிமுதலியசில நாடுகளிலிருக்கும் ஷெமரபுக்குரிய சிலகண்ணியர்கள் வேண்டுகோளின்படி சுரலயதாளவழுவின்றி இயற்றியதை ஷையார் குமாரர்- சிதம்பரமுதலியாரவர்களால் கொ-மாணிக்கமுதலியார் கம்பேனியாரவர்களது மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டதை இலக்ஷணக்குறவஞ்சி ஸ்ரீகிருஷ்ணவிலாசத்தை மகாகனம்பொருந்திய கவரன்மெண்டாரின் (௧௮௬௭) ம்வருஷத்திய(௨௫)வது ஆக்டின்(௨0) வதுபிரிவில்(௬) வது விதியின்படி காபிரயிட்ரிஜிஸ்டர் ஆகியிருக்கிறதாதலின் இதை அச்சுக்கூடத் தலைவர்களும் மற்றவர்களும் இந்நூலாசிரியர்குமாரனாகிய எனது அநுமதியாவது அல்லது-கொ-மாணிக்கமுதலியார்கம்பேனியாரது அநுமதியையாவது பெறாமல் எவ்விதத்திலும் அச்சிடக்கூடாது அப்படிஅச்சிடுவாராயின் மேற்கண்ட ஆக்டின்பிரகாரம் கோர்ட்டார் மூலமாய்நடத்தப்படும்.

இங்ஙனம்

ஸ்ரீ பனப்பாக்கம் - சிதம்பரமுதலியார்.

சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை செங்கான்கடைக் கடுத்த நாட்டுப்பிள்ளையார் கோயிலுக்கருகில் சிங்கப்பட்டணம் சுப்பிரமணியமுதலியார் தெருவில்கிழண்டைவாடை (௨௮) வது கதவிலக்கமுள்ளவீட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மனோன்மணிவிலாசமென்னும் அச்சுக்கூடத்தில் இந்தஇலக்ஷணக்குறவஞ்சியும் கிருஷ்ணவிலாசமும் இன்னும்பலவித தமிழ்தெலுங்குமுதலிய வயித்திய சாஸ்திரங்களும்விலைசரசமாய் விற்பனைசெய்துவருவதால் வேண்டுபவர்கள் மேற்கண்ட வீட்டில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

சுபமஸ்து.

சிறப்புப்பாயிரம்.

ஆசிரியப்பா.

சீர்மலியகிலசராசர மனைத்துமாய்ப்
பேர்மலிந்திலகப் பெற்றதாயல்லவாய்
ஒருதனிமுதலா யும்பர்கள்பராவ
வருசிதாகாசமாய் வயங்கியசோதிக்
கண்ணுதற்பெருமான் கருத்திற்கினியதாய்
வண்மைசேர்கங்கையை வாரிசூழுலகிற்
பவவினைசடிந்திடப் பகீரதன்பணிந்தே
புவிதலைக்கழைக்கப் பொருவிலாவருள்சே
ரம்மையுமெழுந்தே யளப்பிலாப்புவியி
லெம்மையாட்கொண்டா லிருந்திடுங்காலில்
அங்கண்மாஞாலத் தருமறையிலாது
செங்கண்மாற்றேவி திருவுளங்கனிந்தே
நாயனுக்குரைத்தே நங்கையுந்தெய்வ
மாயக்குறத்தியாய் வனிதைபாலடைந்தே
மனத்துளகுறையெலாம் வழுவறப்புகன்றதூஉம்
அனைத்தினுமிலங்கு மரனிடஞ்சேர்த்தும்
புவியுளோர்செழித்திடப் பொருவிலாமழையா
னவையதுதீர்த்த நலந்திகழ்சரிதையை
சமயகோளரியாய்த் தரணியிலெழுந்து
விமயநற்புதல்வி யெழிற்றனப்பாலுண்
டோங்கறுமுகனுக் குறுதுணையாகித்
தீங்கொளிரசுரரைச் சேணுலகேற்றிச்
செங்குந்தரென்றே திருந்துசீருள்ளார்
பொங்குகற்படமும் புதுமலர்ச்சோலையுஞ்

தங்குமால்வரையொளிர் தணிகையம்பதியை
திங்களாதவர்க டிருந்துநாள்வரையில்
நாடதாய்ப்பெற்றே நலந்திகழ்சத்திர
வாடியிலுறையும் வண்கிளைநாடரு
மேதகுதமது மென்மரபுதித்தே
போதரும்புகழ்சே ரொளிர்பனப்பாகைத்
தலமதிலுறையுஞ் சதிர்கொள்பொன்னம்பலஞ்
நிலமிசையிழைத்த நிகரிலாத்தவத்தால்
உதித்தநற்சுகுணன் வுத்தமர்சிகாமணி
விதித்திடுமெய்யனு மெச்சுநற்றிறலோன்
மூநியப்பமாலெனு மூதறிவோனை
வினவிடக்கேட்ட மெய்ம்மைக்கிரங்கி
இயலிசைநாடக மென்னுமுத்தமிழில்
நயமதையுணர்ந்தே நாவலர்மகிழ்கொள
வானமரோமு வயங்குசீர்முகிலுண்
தேனமரலர்மழை சிந்தவெழுந்தொளிர்
சங்காரித்தத் தனிமுகிலெனவே
இங்கிதர்கவிலு மிலக்ஷணவஞ்சியாய்
இகமதிலோங்கு மிணையில்நாவலர்க
ளகமதுகளிக்க வமைத்ததையன்னோன்
செய்தவத்துதித்த சிதம்பரவள்ளல்
வையகமதனில் வழங்கிடக்கருதி
சென்னையுணுந் திகழேந்திரங்களில்
மன்னியசீர்த்தி மனோன்மணிவிலாச
மென்னுமெந்திரத்தில் மேதகையோருளத்
துன்னியேமகிழ்ந்து வுலகெலாம்வாழ்த்த
அச்சியற்றியதோ ரற்புதப்பேறை
நச்சொளிர்நாகற் கிறைவனுமுரைக்க
அரிதெனப்புகன்று லம்புவியதனிற்
றெரியவல்லவரியார் செகந்தனின்மாதோ.

முற்றும்.

உ

கடவுள் துணை.

கங்காபவானிக்கு இலக்ஷுமிதேவி சொல்லிய

இலக்ஷணக்குறவஞ்சி.

விநாயகர்துதி விருத்தம்.

பூமணவாளன் சூலி புகழ்மறையோனும் வாழ்த்தும்
ஓமெனவிளங்குமுன்னோ னுமையவள்மகிழ்ந்துதந்தோன்
தேமொழிகாவிகங்கட் சிதைவிலாதெழுதவல்லோன்
ஏரமமாமுகவையாளி நாயகன் காப்பதாமே.

பொது விருத்தம்.

தேவருமூவர்தேவிகளறிஞர் சீரடிபோற்றிகெங்கைக்குப்
பாவனமாகயிலக்குமிவந்து பகர்ந்தநற்குறியிலட்சணத்தை
தூவியனஞ்செறிவயல்பனப்பாகை துலங்குசெங்குந்தரில்வந்து
மேவிடுபொன்னம்பலன் தரு முனியன்விளம்பினன்வெகுநலமு [டனே.

திபதை-இ-ம்-சாவேரி.

கார்தருங்குழலுங் களாநிதிமுகமும்
பார்தரத்தனமும் பசுங்கிளிமொழியுந்
தோயஜவிழியுந் தொண்டைநேரிதழுஞ்
சீயெனுமிடையுஞ் சிந்துரநடையும்
மாந்தளிர்கரமும் வடபத்திரவயிறும்
பரங்களின்படமெனப் பகர்பெறுமல்குல்
கதலிபோற்றுடையுங் கச்சபக்கழலுஞ்
சதரில்பொன்னவட்கு தாழ்விலாநல்ல
வழகினைக்கொண்டுநல் லாடையுமணிந்து
பழுதில்வொட்டியாணம் பயிலுறப்பூட்டி
குலபூஷணங்கள் குறைவிலாப்பூண்டு
நலமிகும்பனப்பாகை நகரினில்மேவும்
பன்னகசயனனார் பதங்களைப்போற்றி
மின்னலைப்போல விளங்கவந்தனளே.

இலட்சுமியாகிய குறத்திவருகிற

தரு-இ-ம்-மத்தியமாவதி-அட்டதாளம்

பல்லவி.

வஞ்சிவந்தனள்பாரீர் மலைக்குற
வஞ்சிவந்தனள்பாரீர்.

அநுபல்லவி.

வஞ்சிவந்தனள்நல்லச் செந்தாமரைகள்போல
வதனந்திக ழிதழுங்கனி மதனன்சதி ரதியென்னவும் (வஞ்)

சரணங்கள்.

மஞ்சுமிருதுவானபலுக்கும் திகழ்
வனசமுகிழ்க்கொங்கைகுலுக்கும்
அஞ்சநடையினைக்கண் டகிலத்தோர் மயங்கிக்கொண்
டடுத்திட்டிரு கரமேந்தியென் னிடத்திற்குறி யியம்பென்னவும்()

தவளச்சங்குகழுத்தசக்கும் நல்லத்
தாக்குவளைவிழிமசக்கும்
பவளக்கொடியிதழும் பதிந்தத்தந்தவழகும்
பார்மீதிலுள் ளோர்கண்டொரு கார்மின்னலுங் காண்பித்தெனு()

சுரும்பினம்பாடியேவாழும் நல்லத்
துங்கத்துருமங்கள்சூழும்
வரம்பிலாப்பனப்பாகை வள்ளலைப்புகழுவோர்
வாணீதளிர் பாணீமுகிர் வேணீநல ஜாணீயென (வஞ்சி)

விருத்தம்.

மரகதவயிரத்தரளமுமாசுண மணியொடுபதுமராகமும்
வரிசையதாகவிழைத்தொருமாத்திரைக் கோல்குறக்கூடை கொண்டு
தா, னிரதியினிணையெனயாவருமெழிலினைக் கண்டெதிர்கொண் டுகூ
விடம், பரிமளமலர்மகளென்னவேபண்பொடுவந்தனள்பருவமாகவே

குறத்திசொல்தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

குறியிலக்கணங்கேளக்கே மறைமுறையே
குறியிலக்கணங்கேளக்கே

சரணங்கள்.

குறியிலக்கணங்கேளுங் குடும்பசுத்திகளையா
னறைகின்றேனுந்தனுக் கறிந்தமாத்திரமிப்போ (குறி)

மூவர்தேவர்கட்கும் முனிவோர்பத்தினிகட்கும்
பாவனமாகவே பகர்ந்தக்குறியிது (குறி)

செல்காலம்நிகழ்காலஞ் சிறந்துவருங்காலம்
நல்காலந்துன்மைகள் நானறிந்துசொல்வேன் (குறி)

திருவாழ்பனப்பாகை புரியினில்மேவிய
கரிராஜவரதனூர் கருணையால்யான்சொல்லுங் (குமி)

கங்கைசொல் கந்தம்-மோகனம்.

முறைமைதெரிந்தென் மனதுளக்
குறிகளியம்புகின்றேனெனக் கோதையேகேளாய்
திறமாயுனதூர்பேர்களுந்
தறணியோர்புகழ்நீயுஞ் சாற்றிடுவாயே.

குறத்திசொல்-திபதை-இ-ம்-ஆரபி.

மாசிலாமேனி வனிதையேகேளாய்
தேசதேசங்கள் திரிந்தெங்குநாங்க
ளகமேறிவிற்கு மவடத்திற்சென்று
தலைகளையாய்வாங்கித் தான்கொண்டுவந்து
குறைந்திடாததனிற் கொள்முதற்போக
மறந்திடாமீந்து வந்தலாபத்தைத்
திறந்தவராமல் தினம்வயிர்வளர்த்துப்
பறந்தபட்சிகள்போல பாரினில்மேவி
தினந்தினமோரூர் சிருடனிறங்கி
கனந்தருங்குடிசைக் கட்டியேவாழ்வோம்
எங்களுக்கோரு ரியம்பிடவில்லை
தங்குவதோரிடந் தானுமேயில்லை
யதுவலாலென்குலத் ததிசயமொன்று
மதியுளபுருடர்க்கு மனைவிநாலைந்து
குணமாகவுண்டவர் குழவிகளீன்றால்
கணவர்கள்முன்னதாய் காயங்கள்தின்பர்
கழுதைகள்மேய்த்துக் கட்டுவார்மகிழ்ணர்
மழைகுழலான மாதரிலொருத்தி
குடிசையிலிருந்து கூழ்பண்ணிவார்ப்பள்
முடிமீதில்மற்றபேர் மூட்டைகள்வைத்து
ஊரூர்திரிந்து வுளவாகமாறி
பேரூரிற்குறிகள் பேசியேவருவோம்
வந்தபின்னுங்கள் வரிசைதப்பாமல்
மூந்துசக்களத்தி மொழிப்படிகேட்டு
உண்டுறங்கிடுவோ முள்ளதிதம்மா
கண்டுகொள்ளென்பேர் கமலியென்பாரே

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

மாதுசிரோன்மணிகேளம்மா - என்குலத்துள்ள
வண்மைகளெல்லாஞ்சொல்வேனம்மா

இலக்ஷணக்குறவஞ்சி.

சரணங்கள்.

ஆதிகாலமுத லாகநாங்கள்மனு
நீதியொன்றினும் நீங்கிலோமம்மா (மாது)

சிறுமியோர்க்குநல் லறிவினோர்க்குமுள
குறியிலக்கணங் கூறுதுமம்மா (மாது)

கச்சணிந்தமுலைக் கிச்சையாகநல
பச்சைகுத்துவோ மெச்சவுமம்மா (மாது)

தூயவர்க்குமொரு நாயனாகவளர்
மாயனார்பதம் மறந்திலோமம்மா. (மாது)

கங்கைசொல்-விருத்தம்.

சிங்கினிசொல்வதெந்தன் செவிக்கின்பமாச்சுநல்ல
துங்களின்குலசம்பந்த முலகினிலுண்டோவின்னந்
தங்கவாபரணம்நீங்கள் தரித்திடாதிருப்பதென்ன
சங்கைகள்நிவர்த்தியாகச் சாற்றுவாயெந்தனுக்கே.

குறத்திசொல்-திபதை-இ-ம்-சௌராஷ்டகம்.

நலமாகவாழும் நங்கையேகேளாய்
குலவிசேடங்கள் கூறுகின்றேன்யான்
சிவனாளித்த சேனாபதிக்கு
தவமிகுவள்ளியை தந்ததினாலே
யரனெங்கள்சம்மந்தி யானாரம்மா
திருமாலவரொடு சேர்ந்ததால்நாங்க
ளொருகுலமாயினோ முண்மையாயதனால்
கொக்கிறகும்மயிற் கொண்டைபீலிகையும்
தக்கவேமுடியினிற் றரித்திடுவோம்பின்
வக்காமணியும் மாலையாய்ப்பூண்போம்
மிக்கோர்தவத்தை விளக்குமானுரியை
ஆடையாயணிவோ மழுகுகள்வேண்டோம்
காடுறைந்திருப்போங் கண்டிடந்திரிவோம்
பொன்வெள்ளிகலன்கள் போடவேமாட்டோம்
நண்புள்ளவர்க்கொரு நாயகனான
பரமனார்பூணும் பணிகளாகையினா
லரிதாகவேநாங்க ளணிகுவோமம்மா

கங்கைசொல்-விருத்தம்.

மகியெலாஞ்சுற்றிப்பண்ட மாதிநேமென்றாய்நீயும்
வகையுள்ளதேசந்தன்னில் வண்மைகளென்னகண்டாய்
தகவலாயெந்தனுக்கு சரித்திரந்தன்னையெல்லாந
தொகைபடச்சொன்னாயானாற் சொர்ணமுந்தருகுவேனே.

குறத்திசொல்-கண்ணிகள்-இ-ம்-ஆரபி-அடதாளசாப்பு.

அங்கவங்கக்கா-லிங்கக்குலிங்கமு-மாந்திரவிதேக-விதர்ப்பகாம்போஜ
அழகுதா னம்மா-அழகுதான் [மும்

கேகபர்ணட-கேரளகொங்கண-வாகுளலாட - மராடசௌராஷ்ட
வண்மைதா னம்மா-வண்மைதான் [மும்

சோளநேபாள-பங்காளசிங்காளமும்- தோராதசாளவ-மாளவமலையா
சுபங்கள்தா னம்மா-சுபங்கள்தான் [ளம்

கோசலகூர்ச்சர-குருசிந்துபாஞ்சால- மாசிலாகாந்தார-மகதபுளிந்தமு
வாசிதா னம்மா-வாசிதான் [ம்

கங்கைசொல்-விருத்தம்.

பொருப்பெனுந்தனத்தினளே புவிதலங்கண்டேனென்று
யருப்பிதமாகநல்லோர்க் கறங்கள்செய்தன்பதாக
விருப்பமாயிருக்கின்றாரா வீதிவாழ்மனிதரெல்லா
மிருப்பதைவயணமாக வெந்தனுக்குறைத்திடாயே.

குறத்திசொல்-திபதை-இ-ட-ஆனந்தபைரவி.

கன்னியேகேளாய் கடல்சூழ்ந்கலர்ந்த
மன்னுமன்பத்தாறு மண்டலங்களினில்
மாசிலாநல்ல வடதிசையதனில்
காசிமாநகர்முதல் கருதுதென்றிசைக்குள்
வீசியபுகழ்ரா மேசுரமீறாய்
தேசவண்மைகளைச் செப்புவேன்சிலஞன்
பண்புயமுனையும் பாகீரதியும்
நண்புள்ளசரஸ்வதி நருமதைசிந்து
மங்களகோதா வரிகயாகிருஷ்ணை
துங்கபத்திரையும் சுபபாலநதியும்
காவேரிவைகையுங் களித்தசேதுவினும்
மாவிரதங்களாய் மனமகிழ்ந்தன்பின்
மூழ்கியேசெபதப முடித்திடுவாரும்
தாழ்விலாதரிசிவ தலங்களைமுதலாய்
காலைசந்திகளுங் கட்டளைப்படிக்கு
சாலவேயாகம சாஸ்திரம்வழுவா
பூசனைப்புரிந்துப் புகழ்ந்துற்சவங்க
ளரசையாய்செய்துநின் னடிதொழுவாரும்
கனமாகவுலகினைக் காக்குமன்னவர்கள்
மனுநீதிதப்பாமல் வண்மையாய்செங்கோல்
செலுத்தியேசதுரங்க சேனைகளோடு
கலித்துவாழ்குவருங் கருணையாலெந்தத்
தடத்திலுஞ்சாலை சத்திரதடாகம்

இலக்ஷணக்குறவஞ்சி.

முடித்துவைப்போரும் முறைப்படிசரிதை
கிரியையோகங்கள் கிளர்ந்திடுஞானம்
அறிவுடனேயுணர்ந் தனுஷ்டிப்போர்களு
மதிநகள்முனிவர்க ளந்தணர்க்கவிஞர்
சதிருடன்யாத்திரை சஞ்சரிப்போர்கள்
அரிபரதேசிகள் யாவர்க்குமம்மா
குருவிசுவாசமாய்க் கொண்டேயவர்க
ளவாப்படியெதிர்வந் தடிபணிந்தேத்திச்
சிவார்ப்பிதமெனச் சிந்தையில்நினைந்து
அறுசுவையொடுநல் லன்னம்பகர்ந்து
குறைவிலாசொர்னங்கள் கொடுத்துமேபின்னும்
குழந்தைபால்தலைக்கெண்ணெய் கோதானமுதலா
யழுந்தமுப்பத்திரண் டறங்கள்செய்கின்ற
நிவைகட்கெல்லாமோ ரிடர்களவந்திடுமென்
றுவகைகூர்ந்திடவுனக் குரைத்திடவந்தே
னென்மொழிகேட்டு யேகிவிண்ணுலகில்
நன்மழைபெய்யவும் நல்கிடுவாயே.

கண்ணிகள்-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

மானேகேளென்மொழியம்மா - இந்த - மானிலத்துள்வண்மையம்மா
வானவர்தேவருமம்மா - தொழ - மகிமைவிளங்கியதம்மா

வானுறவோங்கி வளர்ந்தலர்ந்தேமலர்
தேனிறைக்கும்நல்ல திவ்யவனஞ்சூழும்

காஞ்சிநாடுண்டடியம்மா - அதில் - காமாக்ஷிதேவியுண்டம்மா
காமாக்ஷிசன்னிதானத்தில் - ஒரு - காமக்கோட்டிபீடமம்மா - அதை

கர்த்தவ்யமாகயே கம்பர்கச்சபேச
ரத்திவரதர்வலம் வருகின்றதோர்

பேரானவன்னகர்க்கம்மா - நல்ல - பெலவாதிபதிகளுமம்மா
வீராதிவீரர்களம்மா - பதினெண் - விருதுபடைத்தோர்களம்மா

தோராதோராயிரத் தொள்ளாயிரம்பேர்கள்
சீரானசெங்குந்தர் தேவிச்சவடிவந்தோர்

சூரனைவென்றோர்களம்மா - சுப்பிர- மணியர்சகோதரரம்மா
பாரினிற்புகழ்கொண்டோரம்மா - சிவ - பக்திக்குகந்தோர்களம்மா

ஆரணத்தோருக்கு மரும்புலவோருக்கும்
மாரிபோல்சொர்ன மகிழ்ந்துப்பொழிந்திடும்

சிங்காதனமுள்ளோரம்மா - காஞ்சித் - திருநாட்டைச்சூழவுமம்மா
மங்களநாலுநாடம்மா - அதின் - வண்மையைச்சொல்வேன்கேளம்மா

பூங்காவுறைச்சிவ புராநாடுகீழ்பாலில்
பாங்கானநந்தியால் பாலித்துவாழ்வது

கருதுந்தென்பாலினிலம்மா - முதற் - கடவுள்கணேசனையம்மா
சுருதிகள்நான்கும்நின்றம்மா - மிகத் - தொழுதேத்துமாதலமம்மா

பெரிதானதிருத்தொந்தி புராநாடுதொண்டர்க்கு
பரிசுதந்துவெகு பாக்கியம்பெற்றது

பச்சிமபாகத்திலம்மா - எட்டா - பாலர்க்குமுடிசாய்த்தோரம்மா
உச்சிதமார்க்கபந்தம்மா - அவ - ருறைந்திடுமாதலமம்மா

அச்சமொன்றில்லா விரிஞ்சிபுரநாடு
அத்தன்மூத்தையனு ரருளின்பேர்பெற்றது

உத்தரபாகத்திலம்மா - அங்கு - உண்டாலங்காடர்காணம்மா
சித்தர்வித்தியாதரரம்மா - போற்றி - சீர்பெற்றமாதலமம்மா - அதை

பத்திப்பெருத்தச் சோளிங்கபுரஞ்சூழ்ந்த
பரவைநாடும்பர்கோன் பதியொத்திருப்பது (அந்த

இந்நான்கிகோட்டினுடம்மா - கிளைநா - டெழுபத்திரண்டடியம்மா
எந்நாட்டிலுள்ளோருமம்மா - ஈசற் - கியல்பானதருமங்களம்மா

அன்னதானமுதல் யாவும்செய்கின்றவர்
நன்மையாய்வாழ்ந்திடப் பொன்மழைபெய்குவாய் (மா)

கங்கைசொல்-விருத்தம்.

பேதையேகாஞ்சிநாட்டைப் பெரிதெனுங்காமக்கோட்ட
மாதியாயதிலுண்டென்று மரியரன்முதலாயுள்ளோர்
மாதவர்துதிக்கநாளும் வலம்வருகின்றுமொன்றீர்
நீதியாயவைகளெல்லாம் நிகழ்த்துவாயெந்தனுக்கே.

குறத்திசொல்எழுசீரடி ஆசிரிய-விருத்தம்.

பிரணவப்பரம்போற்பெண்ணுருவாகிபேரிபமுகன்முருகனையும்
பெருமையாயொருநூறுயிரதஜொன்பான்பேர்களையுதவிசூரனையே
சருவிவேலதனல்வானவர்தமக்குத்தருநிழலீந்துதாரணியில்
சங்கரனருளால்நந்தியிந்திரன்பால்தந்திவத்திரநடுவன்பால்
சரவணன்வருணன்றிசைதனதன்பால்தாக்குளவயிரவரிவர்க்கு
சார்பெனும்வீரர்தமையவரோடுகானமைத்ததின்மருங்கினிலே
யரியதாகியநவக்கோணமிட்டதனிலருந்தவமியற்றினாளதனு
லதிகமாங்காஞ்சிநகர்காமக்கோட்டமதுவெனுமறைவதுமறையே.

கண்ணிகள்-இ,ம்-சங்கராபரணம்-அடதாளம்

இன்னமோரதிசயங்கேளுநீயம்மா
யியம்புகின்றேனந்தவியல்பினையம்மா

இலக்ஷணக்குறவஞ்சி.

பன்னுங்காஞ்சிநகர் தன்னிலேயம்மா
மனோன்மணியானகாமாக்ஷியுமம்மா

தானேதானாகச்சிவத்தையுமம்மா
தன்னுக்குளங்கீகரித்தனளம்மா

வானவர்மூவருமதினாலேயம்மா
வலம்வருகின்றனர்மகிழ்ந்துமேயம்மா

சத்திசிவமுமொன்றானதாலம்மா
சைவதலத்தன்னகரினிலம்மா

எத்திசையும்புக ழீஸ்வரியம்மா
இல்லாதவாறென் றிசைப்பார்களம்மா

நிலையாகத்தவஞ்செய்யு முநிவோர்களம்மா
நித்தியமத்தல மென்பர்களம்மா

உலகினிலுள்ளோர்கள் யாவருமம்மா
உயர்ந்தத்தலமென் றுணர்த்துவரம்மா

கங்கைசொல்-விருத்தம்.

இளமதிநுதலினாளே யெழில்பெறுங்காஞ்சிநாட்டின்
வளமெலாந்தெரிந்தேனம்மா மாநிலந்தன்னிலின்னம்
தளர்விலாநான்குநாடு தழைத்துவாழ்ந்தோங்குதென்றாய்
களிவுகூர்ந்தெந்தனுக்கு கசடிலாதுரைத்திடாயே.

குறத்திசொல்எழுசீரடிஆசிரிய-விருத்தம்.

நதிமதிசூடும்நாதனார்செங்கோன் நடாத்துகோமுகரிருந்திடமும்
நலசிவபுரநாடென்னலுமாகும் நான்மறைகளுந்துதித்தேத்த
துதிசபமுடையோர்விற்றிருந்திடமும் தொந்திமாநாடெனலாகும் [தி
தோற்றுதற்கரியப்பிரணவப்பொருளைச் சொல்லியேசிறையினிலிருத்
விதிதமாய்ப்பிரயசிட்டனைச்செய்த விசாகனிருந்தநல்லிடமும்
விருஞ்சிநாடெனவும்விளம்பலுமாகும் வீரியவைரவநாதன்
சதிருடனிருந்ததலமதுபரவை நாடெனச்சாற்றுவரப்பால்
தரணியிலுள்ளநாடெலாமதின்கீழ் தகவலாயுரைத்தனங்கேண்மோமா,

விருத்தம்.

வேலவர்பிரமசிட்டை விசிதமாய்ச்செய்ததாலே
சாலவேவந்தநாமந் தருமென்றாய்விரிஞ்சிநாடு
கோலமாய்வைரவர்க்கு கொண்டதுபரவைநாடென்
றாலமர்விழியினாளே யானறிந்திடச்சொல்வாயே.

குறத்திசொல் விருத்தம்.

கஞ்சனைக்துமுடியினிலொன்றைக் களைந்தகாலிடரடுத்தார்க்கு
காசினியெங்கும்வைரவநாமங் காண்கபிக்ஷாடனமேந்த
மிஞ்சுமப்பிரமவத்திநீங்கிடவும் விண்டுதன்மாய்கையாலவனை
வீறிவாழ்கங்கைக்கரையினிற்கொடுபோய் மின்னுமப்பதிவிரதையினு
லஞ்சிடாதீயும்படியதுதவறி யவனிமேல்விழவுஞ்செய்து
ஐயனர்பிழையையகற்றினரதுவு மாகுதியேதெனக்கென்ன
தஞ்சமென்றிவடஞ்சார்ந்தெவர் செயதிலோதககமெனவிதித்தனரங்கீர்
தண்பரவையினிற்புகுவதாலதையே சாற்றுவர்நாடெனமாதோ.

தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம் ஆதி.

பல்லவி.

தெரிவையேசொல்வேன் கேளுமம்மா - இனியுண்டான
சேதியறிந்ததெல்லா மம்மா

சரணங்கள்.

ஒருநூறுயிரத் தொன்பதுவீரர்கள்
பரவிநிறைந்தனர் பாரினிலம்மா (தெ)

அங்குசமேந்தி யரக்கரையமாய்த்ததிற்
செங்குந்தரொனும்பேர் சிறந்தனரம்மா (தெ)

பவவினைதீர்த்திடும் பார்வதியருளால்
சிவனதிகாரஞ் செலுத்துவரம்மா (தெ)

ஆகமவேத மறித்ததின்வழியே
தாகமாய்சார்ந்த சைவர்களம்மா (தெ)

கங்கைசொல் விருத்தம்.

மதிமுகவனிதைபாரே வண்மைசேர்நான்குநாட்டிற்
கிதமுறுங்கிளைநாடின்ன மெழுபத்திரண்டுண்டென்றாய்
சதிருடனவைகள்யாவுந் தானறிந்திடுவதாக
விதிதமாயெந்தனுக்கு விரைவினில்விளம்புவாயே

குறத்திசொல் அகவல்-இ-ம்ஆரபி.

தார்புனைநந்தியின் தயையினல்நாளுஞ்
சீர்புனைந்தோங்குஞ் சிவபுரநாட்டின்
வளங்கொளுங்கிளைநாடு வருமுறைச்சொல்வேன்
விளங்கிவாழ்திநகல் மேலப்படப்பை
பழுதிலாகீழப் படப்பையாத்தஞ்சேரி
வழுவிலாமூன்றுமோர் மாநாடதென்பர்
பயில்வுறுமானும் பதிசெம்பாக்கமு

முயர்வுறுமூணத் தொன்றகரமுமின்
நான்குமோர்நாடு நலந்திகழ்முன்னூர்
மேன்மைகட்செய் பரமேசுரமங்கல
மும்மதராந்தக மூன்றுமோர்நாடு
வம்பவிழ்திண்டி வனஞ்சாரமோர்நாடு
பரிவுகொள்வக்கரைப் பத்துமோர்நாடு
திருவக்கரைப்புதுச் சேரியொழுகரை
இவைபத்துநாடு இயல்திரிபுவன
முவகைகொள்நல்லரத் தூருமோர்நாடு
திருவதிப்பாலூர் சேரவோர்நாடு
தெரிதருமிடையாத்தூர் திருவெண்ணெய்நல்லூர்
கனந்தருமோர்நாடு கருதுபனமூலே
அனந்தபுரமுமோ ரழகுகொள்நாடு
பரவிவாழ்வழுதிலேப் பட்டுமோர்நாடு
மருவுமாப்பறைய வரமாகூரென்னும்
இட்டமாயிரண்டுந் திகழுவோர்நாடு
பட்டணங்கருங்குழி பரவுமோர்நாடு
குறைவிலாமன்னூறு கோவிலோர்நாடு
நெறியானபாளையம் நெடுந்தனிநாடு
சரியானகுபாகந் தனிநாடுஜம்பை
திருவாங்கமிரண்டுஞ் சீர்பெறுநாடு
பண்பதாயிப்படி பதினேழுநாடும்
வண்மைகீழ்ப்பாலில் வளர்ந்திடுகின்றதா
லுண்மையாயவைகளுக் குளபெயரெல்லாம்
நன்மையாயுரைத்தேன் நயந்துகேளம்மா.

தரு-இ-ம்-காம்போதி·தாளம் ஆதி.

பல்லவி.

தாயேயென்வாய்மொழிகேளம்மா-இனியுண்டான
சங்கதியுள்ளதெல்லாமம்மா

சரணங்கள்.

மாயோன்சோதரிகச்சி மாநகரின்மேவியே
தூயோர்துதிக்கத்தவந் தோய்ந்தக்காலேயிலம்மா (தா)

மலரோன்சுரர்முதலாய் மாதவர்புடைசூழ
நலமாகவேகீழ்ப்பாலில் நந்தியைவைத்ததினுல் (தா)

பவனதிகாரமெல்லாம் பகருந்தன்மையினலே
சிவபுரநாடதென்று தேர்ந்துதப்பெயரெங்கும் (தா)

தோகையேவீரர்புடை சூழ்ந்துநின்றதவளை
பாகமாய்கிளைநாடு பதினேழாச்சுதம்மணி (தா)

கங்கைசொல் விருத்தம்.

தவமிருந்தோங்குகின்ற தாயேநீகீழ்ப்பாலின்வாழ்
சிவபுரநாட்டைச்சார்ந்த சீருளகிளைநாடெல்லா
மூவமையாயுரைத்தாயின்ன மோங்குதென்னாட்டிலுள்ள
செவையொடுகிளைநாடெல்லாந் தெரிந்திடவுரைத்திடாயே.

குறத்திசொல் அகவல்-இ-ம்ஆரபி.

கங்கைவேணியனார் காதலால்வந்த
ஐங்கரனருளா லழகோங்கிவாழும்
திருத்தொந்திபுரமெனும் தென்னாட்டைச்சார்ந்த
கருத்துள்ளகிளைநாட்டின் கணக்கினைச்சொல்வேன்
முருகமங்கலநாடு முனிவோர்களேத்தும்
திருவைமாத்தூர்நாடு திருவண்ணாமலைநாடு
கோதிலாவாதூர்செங் குறிஞ்சிமியார்நாடு
தீதிலாக்கச்சித் திறல்தளிநாடு
சேலத்துநாடு திட்டகுடிநாடு
பாலொத்ததிருமலைப் பாடிமாநாடு
செந்திருப்பெருமாள் சீர்கோவில்நாடு
கெந்தமாதிரு நாகேசுரநாடு
திருச்செம்பள்ளிநாடு சீர்காழிநாடு
பரிசுத்தமான மாப்பிளைகுப்பநாடு
தேவூருநாடுதிகழ் காட்டேர்நாடு
பூவாருஞ்சோலைசூழ் போலகநாடு
சீருளநல்லச் சேரிமியார்நாடு
பாரினிலிப்படி பதினேழுநாடு
மாகியாய்த்தென்னாட்டி லறைபெயர்தன்னை
தீதிலாதுரைத்தேன் தெரிந்துகொள்ளம்மா.

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

குணவதியாரேகேளம்மா-யான்
கூறுங்குறிகளையம்மா

சரணங்கள்.

அணிமாதிசத்திகள் புடைசூழகச்சியி
லருந்தவமியற்றும்போ தம்பிகையம்மா (கு)

கெணநாதனைவேதங்கிளர்த்த தென்பாலினிற்
கிருபைகொண்டமைத்ததால் கேளுநீயம்மா (கு)

புகழூந்திருத்தொந்தி புரநாடென்றோங்கிட
புகலும்பெயர்வந்து பொருந்தியதம்மா (கு)

தகைவாகவீரர்கள்சூழ்ந்த வவ்விடமெலாம்
தனிக்கிளைநாடென்று தழைக்கின்றதம்மா (௩)

கங்கைசொல் விருத்தம்.

கூறியதென்னாட்டுள்ளக் குணமெலாந்தெரிந்தேனின்னம்
வீறிவாழ்விரிஞ்சிநாட்டின் விளங்கியகிளைநாடெல்லாம்
பூறுவசவிஸ்தாரங்கள் புன்மைகளொன்றிலாமல்
தேறிடவுரையுமம்மா தெரிவையேயெந்தனுக்கே.

குறத்திசொல் அகவல்-இ-ம்-ஆரபி.

சிவசுப்பிரமணியர் செயுங்கிருபையாலே
விவரமாய்விளங்கும் விரிஞ்சிமாநாட்டி
னுளகிளைநாடெலா முண்மையாய்ப்புகல்வே
னளிமுரண்சோலைசூ பூராளூர்நாடு
வாணியம்பாடி மாநாடதொன்று
நாணயக்கொறட்டை நல்லநாடொன்று
தருமபுரிநாடு தளர்விலாதோங்கும்
நிருமலபவானி நீண்டநாடொன்று
வழுவிலாதாரா மங்கலநாடு
இழிவிலாநல்லதோ ரேழாநாடு
புகழாணாநாடு பூரதிணாநாடு
திகழ்கின்றநற்றிருச் செங்கோடுநாடு
வாழ்வுகொள்நல்ல வையாபுரிநாடு
தாழ்விலாதவநாசி தனிநாடதொன்று
நஞ்சுண்டவூர்நாடு நலமிகுந்தோங்குங்
கஞ்சமலர்தடக் காவல்பாளையநாடு
நத்தக்கருவூர் நாடொன்றுமேலும்
முத்தமநற்கரு கூர்காங்கேயநாடு
நறுமலர்சசோலைசூழ் நாமக்கல்நாடு
முறுதியாயிப்படி யுளபதினேழு
முரைத்தனன்மேல்காட்டி னுறும்வளமெல்லாம்
கருத்தொடுமறிந்துகொள் கன்னிநீயம்மா.

கண்ணிகள்-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

அறம்வளர்த்தோங்கிவா ழும்பிகையாளு
மழகானகாஞ்சிமா நகரினிலம்மா

திறங்கொண்டுமாதவம் செய்திடும்போதச்
சிவசுப்பிரமணியனைக்கூடதிசையும்மா

நவவீரர்புடைசூழ காவல்வைத்ததினால்
நானிலமெங்கும் புகழோங்கவம்மா

உவமையாய்விரிஞ்சிநாடென விளங்குநல்ல
உத்தமமான பெயர்வந்துதம்மா
வணங்காதமலரோனை வசஞ்செயச்சிறைச்சாலை
வைத்துலகங்களை வகுத்ததாலம்மா
இணங்குமகற்பத்தில் பிரமற்குவிரிஞ்சியென்
றியம்புநாமமவர்க் கெய்தியதம்மா
இலக்கவீரர்நாலத்தோர் பாகமவருடனிருந்திடங்
களைநாடென்றியம்புவரம்மா
கலக்கமில்லாமல்யான் கருதும்வசனத்தை
கன்னியேமனதாறக் களித்துக்கேளம்மா.

கங்கைசொல் விருத்தம்.

படவரவல்குற்செவ்வாய் பைந்தொடியாளேநீயும்
குடகுநாடதனைச்சார்ந்த கொள்கைகளெல்லாஞ்சொன்னாய்
திடமுளவடநாட்டிற்கு சிறந்திடுங்கிளைநாடெல்லா
மடவுடனறிவதாயென் னன்னையேயுரைத்திடாயே.

குறத்திசொல் அசவல்-இ-ம்-ஆரபி.

திகழ்காளவயிரவர் திருவருளாலே
புகழ்கொண்டசோளிங்க புரஞ்சூழ்ந்தபரவை
நாட்டினுக்கிளைநாடு நானிலமதனில்
தாட்டியாயுளதந்தன் சரித்திரங்கேளாய்
தளர்விலாவளாதிருத் தணிகைமாநாடு
தெளிநாடுமெழிநாடு திருவடிநாடு
எழில்பெறுந்திருமே ழிசையொருநாடு
பழுதிலாக்கொங்கம் பாக்கமோர்நாடு
அழிவிலாதிருக் காளத்திநாடு
வழுவிற்றொண்டமாநாடு மகிழ்வறையநாடு
வேங்கடகிரிநாடு விண்ணோர்கள்யாருந்
தீங்ககன்றுநல்ல திருப்பதிநாடு
செகன்னாதநாடு சிட்டம்பள்ளிநாடு
தகைவானசெம்புரந் தழைத்தோங்குநாடு
வாதபுரிநாடு வளர்சந்திரகிரிநாடு
கருதுவோர்வினை தீர்க்குங்காசிமாநாடு
இப்படிவடநாட்டி னிற்பதினேழு
றெப்பியபெயரோலா மோர்குறைவின்றி
தப்பிலாமறைகளிற் சாற்றியபடியே
செப்பினேனிவையெலாந் தெரிந்துகொள்வாயே.

கண்ணிகள்-இ-ம்-கண்டா-அடதாளம்,

மாலுமயனுமறியாத சோதியை
மனதினலூத்தி மனோன்மணியம்மா

பாலுநன்னீருமொன் ருனதைப்போலவே
பகரும்பிரமச் சொரூபமாயம்மா
பரிபூரணானந்தமான சின்மயத்தினிற்
பண்புடனற்றவ மியற்றும்போதம்மா
வரிசைதயிரிய வைரவநாதனை
வடதிசையிற்காவல் வைத்ததாலம்மா
இயல்பானசோளிங்க புரஞ்சூழ்தபரவைவா
டென்றியம்பும் பெயரெய்தியதம்மா
பயில்வுறும்வடுகனை புடைசூழவீரர்கள்
பரவிநிறைந்திருந் திடநகளுமம்மா
உலகெலாம்புகழ்டீகினேழ் கிளைநாடென்
றுரைப்பர்கள்யாவரு முறுதியாயம்மா
நலகுணவதியான நங்கையரோநீயு
நான்சொல்வதியாவையு நயந்துகேளம்ம.

இதுவுமது விருத்தம்.

தங்குபுகழ்காஞ்சிமா நகரைச்சூழத்
தழைத்தோங்குநான்குநா டதனோடின்னம்
பொங்கமிகுந்தலர்கிளைநா டறுபத்தெட்டு
புவிமீதிலுண்டதுமுன் புகன்றநான்கும்
கொங்கெழுபத்திரண்டுநா டென்பர்யாருங்
கூறினேனவைவையெல்லாங் குறைவிலாமல்
வங்கலுழ்மேனியினுளே வளமாயிந்த
வாறெல்லாந்தெரிந்து மனமகிழ்ந்திடாயே.

கங்கைசொல் விருத்தம்.

குறத்தியிற்றேசவண்மை கூறியகுணத்தினுலுன்
திறத்தியமெல்லாங்கண்டேன் கேடிலாநங்கைநீயும்
நெறித்தவருமலெந்த னெஞ்சினிலுள்ளதெல்லா
மறைத்திடாதுரைத்தாயானல் மகிழ்ந்துநன்மணியீவேனே

குறத்திசொல் விருத்தம்.

பதுமதளாக்ஷிபாணிவை பகர்வதுகேளடிசத்தியமாகவே
சதுமறையறுசாஸ்திரமதிற் சாற்றியபடியெலாமறிந்துநீயாய்
விதியினையீன்றவென்னை யனைவெருதுதிசெய்தகமகிழ்ந்துபுகலு
சதிருடனின்மனதினிலுள சஞ்சலமியாவுமகலவிப்பவே.(வேன்

இதுவுமதுவிருத்தம்.

குறிச்சொலுமியர்கையாகக் கோதைதன்கரத்தைப்பற்றி
யறிவுடனுலகிலுள்ள வருடருந்தேவர்தம்மை
திறமையாய்த்தவறிலாமற் சின்மயக்கியானமாகி
முறைமுறையாகவாழ்த்தி முற்றிலுமேத்துவாளே.

திபதை-இ-ம்-ஆரபி.

கைலாசவாசா காசிவிஸ்வேசா
மயிலையம்பதியா மதுரைசொக்கையா
திருநாவலூரா ஸ்ரீராமலிங்கா
அருணாசலேசா வாலங்காடா
கச்சியேகம்பா காளத்திநாதா
மெச்சுமாரூரா வேதாரணியா
கும்பகோணேசா கொடுங்காலூரா
அம்பலவாணா அருட்பெருந்துறையா
திருக்கழுக்குன்று திருநெல்வேலீசா
உரக்குமாற்பேறு வொற்றியூர்தியாகா
வைத்தியநாதா மார்க்கசகாயா
நயத்தசீர்காழி நாதாமயூரா
அம்பாசமுத்திரா அர்த்தநாரீசா
தென்பாலுயர்ந்த திருக்கடவூரா
திருவான்மியூரா சிராப்பள்ளிநாதா
பெரியகேதாரா பிரபலநந்தீசா
தொப்பையைங்கரனே தும்பிமாமுகனே
சுப்பிரமணியா சூரசங்காரா
வயிரவநாதா மகிழ்வீரபத்திரா
தைரியகருடா தனியாஞ்சநேயா
தில்லைகோவிந்தா ஸ்ரீரங்கநாதா
எல்லையிற்றழைத்த எவ்வளூரையா
திருக்கோவிலூரா திருப்பதிநாதா
செருக்காய்சமைந்த ஜெகநாதசுவாமி
வரதராஜேந்திரா வளர்போர்க்குழியா
பெருமையாலுயர்ந்த பெரும்பூதூரா
உக்கிரநரசிம்மா வோபளத்தையா
திக்கெலாம்போற்றும் ஸ்ரீகிருஷ்ணதேவா
எம்பெருமானே யேழைபங்காளா
அன்புடனீங்க ளனைவருமாக
இவடத்தில்வேகமா யேளியிப்போது
சேவையாகவருகுவீர் தெளிந்துரைத்திடவே

கண்ணி-இ-ம்-கடுக்கா-அடதாளம்.

உலகிலுள்ளதேவரே யென்னிடத்தினி லுள்ளப்படிவாருங்கள்
கலையினுள்ளபடியே கங்கையிட கைபார்த்துச்சொல்லிடவே
மலையோன்றவத்தன்னமே மயிலேநீ வந்துநில்லெந்தன்முன்னே
நிலமையதாகவேதான் மனதினில் நினைத்ததியம்பவேதான்
காட்டேரிக்கூட்டக்காராரண்ணமார்கள் கடுகிவந்துநில்லுங்கள்
நாட்டமதுராவீரா ஐயனாரப்பா நடந்தோடிவாருமையா

வாசவன்போற்றியிடும் பனைப்பாகை வள்ளலேயென்கோவே
நேசமதாகவேதான் காத்திடவே நிமலனேவந்திடுநீ.

திபதை-இராகம்-ஆரபி.

உசனிமாங்காளி யுத்தண்டகாளி
நிஜமானகௌரி நித்தியகாயத்திரி
ரணபத்திரகாளி ரேணுகாதேவி
குணவாளிசாமளி குளார்கவிபகளே
இராஜராஜேஸ்வரி ராஜமாதங்கி
தேஜோவிசாலி திரிசூலிதுர்க்கி
நிர்வாணிவயிஷ்ணவி நித்யகல்யாணி
சர்வாணிசாமுண்டி சண்டிவாராகி
திரிபுரசுந்தரி தேவிபாலாம்பா
பரிபுரபுவன பதியேகங்காளி
கஞ்சிகாமாக்ஷி கருணைகடாக்ஷி
வஞ்சிமீனாக்ஷிவளர் விசாலாக்ஷி
செக்ஷணகாளி திகழவெங்காவில்
பக்ஷமாய்நின்று பலுக்கிடுவாயே

தரு-இ-ம்-சஹான-ஆதிதாளம்.

பல்லவி.

குறித்தவாக்கருளம்மா கொல்லாபுரியம்மா

சரணங்கள்.

குறித்தவாக்கருளம்மா நிறுத்துவைத்ததுபோலென்
கருத்திலிருந்துகொம்பில் பறித்ததெனவேசொல்ல (கு)

துறவோர்களுணாத்திடுஞ் சுருதிமுறைப்படியே
நெறியுடனுரைக்கவென் நெஞ்சினில்வந்துநின்று (கு)

ஒன்றுந்தவறிடாம லுள்ளக்குறிகளெல்லாம்
நன்றுபடவுரைக்க நாடினேனுன்னையிப்போ (கு)

பார்கொண்டபுகழ்பனைப் பாகைநகர்மேவிய
கார்கொண்டல்மேனியற்கு கனிஷ்டசோதரியேநீ.(கு)

இதுவுமதுமட்டு விருத்தம்.

சேலேவிழியாய் சிறந்தபவானிநீ
மேலோகீழோமெய்யோ பொய்யோதான்
காலோதலையோ வெனநீகருதாதே
நூலோர்முறையே நுவல்கின்றேன்யானே.

திபதை-இ-ம்-சங்கராபரணம்.

அன்னையேகேளடி யறைகுவேனிப்போ
வுன்னிடகணவனுக் கொருகுணமல்ல
பித்தரில்பித்தன் பேயோடாடி
மத்தரில்மத்தன் வாதக்காலன்
உடுப்பதுகந்தை யுண்பதுநஞ்சு
எடுப்பதுபிச்சை யேறுவதோடு
தரிப்பதுசாம்பல் சர்ப்பாபரணம்
இருப்பதுசுடுகா டிரண்டுங்கெட்டவன்
முழுக்கெண்ணெயின்றி முடிச்சடைபிடித்தோன்
அழற்கண்கபாலி யசிதியிலதிதி
யிந்தப்பிழைப்புக் கிரண்டுபெண்டீர்கள்
முந்திவந்தவள்நீ முடிமீதேறினாய்
பிந்திவந்தவளோ பெருமைக்காறி
தந்திரமாகச் சண்டைக்கழைத்து
அம்பலத்தேற்றி யரையுடப்பாக்கினள்
வம்புடையவர்க்கு மைத்துனனொருவன்
திண்ணசோறிலாமல் திருடினன்வெண்ணெ
சண்ணவேயிடைச்சிகள் கையில்கட்டுண்டு
மத்தடிப்பட்டான் மைந்தர்களிருவர்
அத்தனார்தனக்குண் டதில்மூத்தபிள்ளை
குறும்வயிறன் மடங்குசப்பாணி
தீனிக்கள்ளன் திறலானைமுகவன்
இளையபிள்ளையுமோ வெழிலாறுதலையன்
வளமாகவெங்கள் வள்ளியைத்திருடின
னிப்படியுங்க ளில்லினல்வாழ்க்கை
யொப்பிதமாக வுன்சக்களத்தி
தப்பிதஞ்செய்து தவத்திற்கிசைந்தாள்
அப்போதுன்கணவ னவளிடத்துன்னை
விட்டழைத்திட்டனன் மெல்லியேயொருக்கால்
மட்டிலாத்தன்னிட வமிசமீடேற
பந்தமாய்த்தவஞ்செயும் பகீரதற்காக
வந்ததுதரணியில் மாதுநீயிப்போ
இப்படியிவடத் திருந்திடிலுலகோர்
எப்படிபிழைப்பர்க ளேகியேவிண்ணில்
மழைகள்பெய்வித்து மகிதலமெங்கும்
அழிவிலாவாழ்க வருள்செய்யுமம்மா.

கங்கைசொல்-விருத்தம்.

சடுக்கெனவெங்கள்வீட்டின் சரித்திரமெல்லாங்கண்டு
படுக்கெனமறைவில்லாமற் பகர்ந்தனையம்மாநானு

மடிக்கடிபுவியில்வந்து வவதிபட்டிடுவதென்ன
யிடக்குறாலேயோசொல்வா யெந்தனுக்கறியத்தானே.

குறத்திசொல் தரு-இ-ம்-மோகனம்-அட்டதாளம்.

பல்லவி.

உள்ளலட்சணஞ்சொல்லுவேன் - கேளுமம்மே
உள்ளலட்சணஞ்சொல்லுவேன்

சரணங்கள்.

கள்ளமுங்கபடுநின் கருத்திலிருப்பதால்
மெள்ளவுஞ்சிவனுனை விடுத்தனன்புவியினில் (உள்)

பஞ்சமடிக்கடி பண்ணநினைக்கின்ற
நெஞ்சின்வஞ்சனையினுல் நீங்கினன்நாயகன் (உள்)

ஆலும்வேலும்போல தானதாகாதுமாய்
மேலுங்கீழுமாக விளங்குவதுன்குணம் (உள்)

பார்க்குள்நலக்கொண்ட பணப்பாகைககரினை
கார்க்கின்றநாதனைக் கைதொழுதேத்தியே (உள்)

இலக்ஷணங்கூறல்-விருத்தம்.

முன்சுழிபின்சுழி முடியிலிருப்பதால்
நன்மொழியாம்நின் நாயகனுக்குத்
தன்மொழிக்குகந்த தம்பியுன்றமையன்
புன்மொழியாகப் போச்சுதிலாதே.

விருத்தம்.

சுரிகுழலுனக்குச் சுருண்டிருப்பதினுல்
திரிபுரமெரித்த சிவநின்கணவர்க்
கரியதாய்நெற்றி யழலினிற்றீய்ந்து
புரிசடையாயுழை போச்சுதம்மண்ணி.

விருத்தம்.

தழைத்திடுங்கீர்த்தித் தயாபரியேநின்
கழுத்தினிற்பச்சையாய் காண்பதில்மச்சம்
வழித்துணையான மகேஸ்வரனுக்கு
பிழைத்திலாநஞ்சு பிடித்ததுநெஞ்சையே.

விருத்தம்.

ஓய்விலாதலைத்தொழி லுள்ளதாலுனக்கு
வாய்மையாய்வெள்ளி வரையினில்வாழ்ந்துந்
தூய்மையாய்நின்பதி சுடலையோடேந்தி
யேழ்மையாய்பலிதனக் கிரந்தலைந்தனனே.

விருத்தம்.

வருத்திடுகோபமும் வந்துநீர்க்குமிழி
பெருத்திடும்லாய்மொழி பெய்யுமாரிநீ

யுரைத்திடவிக்குண முள்ளதால்நின்பதிக்
கெரித்திடநெற்றியி லிருப்பதுகண்ணே.

விருத்தம்.

சானவியேனான் சாற்றுகிறேனுன்
மேனியுமொளியாய் மின்னுவதாலே
ஞானியாய்ச்சாம்பல்நின் நாயகன்பூசி
யீனமாய்க்கைமழுவேந்தி நின்றனனே.

தரு-இ-ம்-ரகுபதி-அடதாளம்.

பல்லவி.

குணத்ததிசெயஞ் சொல்லுவேன்-கேளுமம்மே
குணத்ததிசெயஞ் சொல்லுவேன்

சரணங்கள்.

கணத்தினில்மேகம்போல் கலையெடுத்துவந்து
இணைத்தவரூகல்கி யேகுவாய்மாய்கையாய் (கு)

விற்பனமாகியவிமலிநீ யுலகோர்கள்
கற்பனைக்குட்பட்டுக் கட்டுண்டுநிற்பதுன் (கு)

பதலமாயுன்னிடப் பக்கம்சார்ந்தவருக்
கதிகபாக்கியங்க ளகத்தியங்கொடுப்பதுன் (கு)

தவறிபெதறிவந்து சார்ந்தபேர்தங்களை
யவகரித்திடப்பட்ட யவகுணமுனக்குண்டு (கு)

விருத்தம்.

குமுதபாந்தவன்போல் குளிர்ந்துன்முகமு
மமையுங்காந்தியி னருக்கனைப்போலுஞ்
சமமாய்விளங்குவ தாலேநின்பதிக்கு
விமலன்வல்லவனெனும் விசுதுபுகழே.

விருத்தம்.

அரியதாய்நின்னக டதனிலரூபமாய்
பெருகிடுமவர்க்கு பிக்ஷைகளீந்து
வுரமதாய்வளர்த்துவைத் திருப்பதாலுனக்குச்
சரியதாய்நின்பதி தலையபுரிந்தனனே.

கந்தம்-இ-ம்-மோகனம்.

எம்பெருமான்கரத்தேந்தியே
சம்பிரமாய்விளங்குசங்குசக்கரத்தோடுங்
கும்பமும்நின்கரத்திருப்பதால்
அம்புவிதனைவந்துநீயுமாதரிப்பதுவே.

கந்தம்-இ-ம்-மோகனம்.

மச்சமுநளினமுமகரமு
மிச்சையாய்நின்பதந்தன்னிலிருப்பதாலம்மா

பெச்சிட சிவனார்முடியி
லுச்சிதமாகநீயுமுட்கார்ந்ததுவே.

கந்தம்-இ-ம்-மோகனம்.

கைத்தலமிரண்டும்பெரியதாய்
மெத்தவுமிருப்பதாலுனக்குவீணிலேயம்மா
கத்தனைவிட்டகன்றிடநீயுமே
தத்தியேபூமியில்வந்திடத்துவந்ததுவே.

விருத்தம்;

வரிவரியாகநின்கரதலத்தில் வண்மையாய்க்குங்குமம்போல
பெரிபெரிதாகச்சிவந்தரேகைகளாய்பெருத்துநீண்டிருப்பதாலுலகில்
தருமதானங்களாலேயம்விறதாழ்விலா விளைவதுசாவீ
யருமையாயதனாலருந்தவத்தோருக்களிப்பதுவரங்கள்நின்பதியே.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

இன்னஞ்சிலதுசொல்லுவேன் - கேளுமம்மே
இன்னஞ்சிலதுசொல்லுவேன்.

சரணங்கள்.

முன்னங்கால்கைநிகம் வீறிச்சிவந்துமே
மன்னும்பவழம்போல் வரிசையாய்க்காணுது (இன்)

சேல்விழியிரண்டினுஞ் செவ்வரிக்காணுது
வால்வளைத்தந்தங்கள் வரிசையாயிருக்கின்று (இன்)

வாய்ப்பாகநாபியில் வலம்புரிச்சுழியுண்டு
கோப்பியமாயுந்தன் குதத்திலுஞ்சுழியுண்டு (இன்)

மூக்குப்பெரியதாய் நாக்குச்சிறியதாய்
வாக்குமொழுக்கமாய்த் தீர்க்கமாய்யிருக்கின்று (இன்)

கங்கைசொல்-விருத்தம்

உள்ளதுஉள்ளதாக யுரைத்தனையுன்னைப்பார்த்தால்
தெள்ளியதெய்வலோகத் தெரிவைபோற்காணுதம்மா
மெள்ளெனக்குறத்திபாக வேடங்கொண்டிவடம்வந்தாய்
கள்ளியேநிஜமதாகக் கழறுவாயெந்தனுக்கே

குறத்திசொல்-திபதை-இ-ம்-சங்கராபரணம்.

தாயேநீகேளுஞ் சத்தியமாக
ஞாயமாய்ச்சொல்வே னாநிலந்தன்னில்
மழைகள்வேண்டுவதால் வளருஞ்செந்துக்கள்
பழியதாயுன்மீது பகருகின்றார்க
ளதுவுமல்லாம லகிலத்தையெல்லாம்
பதலமாய்க்கார்க்கப் பட்டவர்நாங்க
ளுருக்கமாயெங்கள்வீட் டுதித்தேயிருந்தும்

திருக்கதாயிப்படி செய்வதால்நீயும்
என்னைக்குறத்தியா யேகியுன்னிடத்தில்
மன்னித்துவாவென்று மகிழ்ந்தெனையாண்ட
நாயகனான நறுந்துழாய்பூண்ட
மாயவர்சொன்னர் மங்கைநான்வந்தே
னிம்மொழிகேட்டு யிசைந்தருள்புரிந்து
செம்மையாய்க்காப்பாய் சீமைலயத்தானே.

கங்கைசொல்-விருத்தம்.

இலக்குமிகேளாயெந்தனுலென்ன
விலக்கியென்கணவனர் விட்டதால்நானுங்
கலக்கமாய்வந்தேன் கடுகிபோய்வெள்ளி
மலைக்கிறையோடே வகுத்துரைப்பீரோ.

குறத்திசொல் விருத்தம்.

கைலையம்பதிக்குக் கன்னியேநாங்கள்
நயமதாயுரைத்தோம் நல்லதென்றுரைத்தார்
செயமதாய்நீயும் சிவன்றனைநாடி
வியனுலகுக்கு மேவிடுவாயே.

பொது விருத்தம்.

அப்படியாவென் றப்புதேவதையும்
கொப்பெனத்தாய்க்குக் கொடுத்தேவிடையும்
மெய்ப்புளசிவன்முடி மீதெழுந்தருளித்
தப்பிலாமழைக டான்பொழிந்தனளே.

இதுவுமது-விருத்தம்.

மழைகளைப்பெய்ய மாநிலம்யாவும்
பிழையிலாவாழ்கப் பெருத்துமேசாலி
யழிவிலாதருமதா னங்களாலயமும்
தழைகொளவளர்ந்து தானிருந்ததுவே.

பொது விருத்தம்.

குறியிலக்ஷணங்கள்கூறி கோதையாள்வருகும்போது
நெறிதவறுதநல்ல நீள்பனைப்பாகைநாதன்
அறிவுயர்ந்தோர்கட்கெல்லா மருளினைத்தரவென்றெண்ணி
மறைகள்பின்றொடரசிங்கன் வடிவமாய்வருகின்றூரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் மகாவிஷ்ணுவானவர் சிங்கனுகவுருவெடுத்து இலட்சுமிதேவியாகிய சிங்கியைத்தேடிக்கொண்டு வருகிற விதங்காண்க.

பொது-திபதை-இ-ம்-சாவேரி.

பொன்னுடர்போற்றும் புண்டரீகாக்ஷன்
தன்னுலகைத் தாழ்விலாகார்க்க

சிந்தையில்நினைந்து சிங்கனைப்போலச்
சுந்தரவடிவாய் தூயபாலத்தில்
திருமணிதரித்துச் சிகையினைநல்ல
மரகதவயிர மாணிக்கங்களா
லிழைத்துபொற்கயுறினி லெழிற்பெறக்கட்டி
தழைத்தநித்திலத்தாற் சரிந்தசுங்குகளும்
புலித்தண்டைமயிற்பீலி பூட்டிசென்னியினில்
நிலத்தினிலொன்றும் நிகரிலாதிலங்கும்
பதுமராகத்தினைப் பாங்காய்க்களத்திற்
சதிரோடணிந்து தட்டிஜல்லடமும்
அரையினிற்பூண்டு யாவரும்பணியும்
சரணத்திற்சிலம்பு தண்டையுமணிந்து
அகிலத்தையெல்லா மடக்குஞ்சிக்கத்தை
விகிதமாய்புயத்தினில் விளங்கவேமாட்டி
நான்மறைளுமலியாய் நலந்தருங்கலைகள்
மான்முயற்பக்கிகள் வண்மையாய்ப்பிடிக்கும்
வலைகளாய்க்கொண்டு வானவர்போற்ற
மலர்மிசைமேவும் வகைநலமுள்ள
சிதேவியான சிங்கியைத்தேடிக்
காதலாய்வந்தனன் கண்களித்திடவே.

மகாவிட்டுணுவாகிய சிங்கன்வருகிற-தரு-இ- ம் - உசேனி-அடதாளம்.

பல்லவி.

சிங்கன்வந்தானே மலைக்குறச்
சிங்கன்வந்தானே

சரணங்கள்.

சிங்கன்வந்தன னங்கசன்போலவே
சிங்கியைக்காணும லெங்கணுந்தேடியே
தேசத்தினில்-திரிந்தெங்கணும்-மாசத்தனல்-வணிகஞ்செயும். (சிங்)

பதைத்துப்பதைத்துப் பக்கங்கள்பார்த்துமே
குதித்துக்குதித்துக் குச்சோட்டமோடியே
பார்க்கப்பதி-நான்குவுல-கோர்க்குமொரு-கோனுகிய (சிங்)

உருட்டியுருட்டிப் பெரட்டிக்கண்களை
யரட்டியரட்டிக் கரட்டுத்தினமாய்
உத்தாரமு-முத்தாகவே-கற்றோர்களுக்-கெற்றருகவே (சிங்)

திக்குகள்போற்றிய சிர்பனப்பாகைவாழ்
சக்கரக்கையனும் பக்குவமாகவே
சிராகிய-திருவாழ்நல-பேராகிய-பெருவாழ்வுள (சிங்)

பொது விருத்தம்.

வந்தசிங்கனும் பனைவியைக்கண்டிடாதவனுப்
எந்தசீமையிலேகியே யிருக்கிருளென்று
சிந்தையாகவேதிசைதிசை பார்த்துமேதிகைத்துத்
தந்திரத்தொடும்மயங்கயே சாற்றுகின்றனனே.

சிங்கன்சொல்-தரு-இம்-சஹானு-அடதாளம்

பல்லவி.

சிங்கியெங்கடையே மலைக்குற
சிங்கியெங்கடையே

சரணங்கள்.

சிங்கியெங்கடையே சங்கையாய்க்காணுது
தங்குமிடத்தினி லெங்கணுங்காண்கிலேன்
சித்துசில-கற்றுநய-மெத்தவள-முற்றநல (சிங்)

சட்டமுள்ளநல்ல கெட்டிக்காறிவெகு
திட்டவட்டமான கட்டபூகியவள
தாக்குமரு-ணேக்குநல-வாக்குமெனை-காக்குங்குண (சிங்)

கண்டசண்டபேர்கள் மண்டிக்கொள்வார்களோ
எண்டிசைக்குளில்லை யெந்தன்பெண்டைப்போல
காட்டிக்குரல்-மீட்டிவிரல்-நீட்டிமயல்-பூட்டிவிடும் (சிங்)

களைக்குதுசொக்குது கலங்குதுமனதுமே
இலக்குமியெங்கேயென் றிளைக்குதென்னுடம்புமே
கரணத்தினில்-கலையாதவள்-தருணத்தினில்-தளராதவள் (சிங்)

இதுவுமது சந்த-விருத்தம்.

வலம்புரித்தவழ்பண்ணைவாயில் வளர்ந்துசென்னெல்விளைந்திடும்
நலம்புரிப்பனப்பாகைமாநகர் நண்ணுநான்மறையோர்களே
நிலம்புரக்குநன்னெறியினேடுமனு நீதியாலுயர்கிருபரோ
பெலம்பொருந்தியவழகினுளெனது பெண்டுவந்திடக்கண்டிலீர்.

இதுவுமது.

வனசமுற்றிடும்பொய்கைமேவிய வளஞ்செறிப்பனப்பாகையின்
றனதனைப்பொருவிவாழும்வைசியரோ சரஸ்வதிக்கிணையாமெனு
மனமகிழ்ந்துவியலிசைபுகன்றிடும் வண்மைசேர்புலவோர்களே
எனதருந்தவம்விளங்கவந்தநல் லில்லவள்வரக்கண்டிலீர்.

இதுவுமது.

நெறியுணர்ந்துநல்லன்புயர்ந்துதிகழ் நெஞ்சிரக்கமுடையோர்களா
யறிவினோர்க்கும்வருமதிதியோர்க்குமகிழ் தமுது தூசுமளித்துதான்
குறைவிலாதகருமங்கள்செய்பனப் பாகைமேவுசெங்குந்தரே
மறிநிகர்த்தயிருவிழியினுளெனது மனைவியாள்வரக்கண்டிலீர்.

இதுவுமது.

மேழிகொண்டுழவுசெய்து சென்னல்விளைவித்துநல்லறிவோர்தனக்
காழிசூழுலகினோர்புகழ்ந்திட வுமமுதளித்தறம்வளர்த்திடும்
வாழ்வுயர்பணப்பாகைமாநகரின் வண்மையோங்குகாராளரே
வீழிநேர்நிகழுமிதழினாளெனது மெல்லியாள்வரக்கண்டிலீர்.

இதுவுமது.

கணிதநூலதனிலுணர்வுமுன்வரும் காலநேர்மையுளவரசர்கள்
குணவிகர்ப்பமுங்குடிகள்வண்மையுங் கூவளங்களுங்கொண்டுதான்
பணிதிகட்டும்வாழலகிடும்பணப் பாகைமேவுகருணீகரே
மணமுலாவுமலர்மகளெனும்மெனது மனைவியாள்வரக்கண்டிலீர்

இதுவுமது.

வரதநூலதினுமதனநூலதினுண் வகையுணர்ந்துவலங்காரமாய்
யரிபரம்பையூர்வசிகளென்னவெழி லபிநயஞ்செயுமழகதாய்
சுரதகீததரங்கமோதிடுந் துய்யநற்பணப்பாகைவா
ழிரதிபோலுருவகணிகைமார்களே யில்லவள்வரக்கண்டிலீர்.

இதுவுமது.

பகரும்வெள்ளிலைக்கமுகுமுதலிய பலசரக்குகடனிலையும்
முகமலர்ந்தொருகாசில்காசு முடிக்கிலாபமெடுத்திடும்
நிகரிலாப்பணப்பாகைவாழ்வணிக னிபமாவணத்தோர்களே
திகழுவாமதிமுகத்தினாளெனது தேவியாள்வரக்கண்டிலீர்

இதுவுமது-தரு-இ-ம்-கெண்டா-அடதாளம்.

ஆசைக்கண்ணாட்டி சிங்கியைக்காணேனேடையே   அந்த
வழககிலங்களி லெங்கணுங்காண்கிலேனையே

பாசமானநல்லப் பதுமினிசாதிகாணையே   நல்ல
பக்குவமானயிலக்குமியவள்காணையே   இந்தக்

காசிதலத்தினில்   கருதும்பெண்களினி
லோசனைகெந்தி யென்றோர்புகழ்கொண்டவள்

கருத்துக்கொரு கலையானவள் பரத்துக்குநல் வலையானவள் (ஆ)

கற்புக்குப்பார்வதிக்கொப்பனையவள்காணையே   கொண்டக்
கணவனென்றேயெனைக்கைதொழுதேத்துவாளையே

அற்புதமாய்நளபாகங்கள்செய்வள்காணையே   வரு
மதிதிகளுக்கன்புபுரிந்தமுதளிப்பள்காணையே

இப்புவியோருக்கு   மிமையவர்யாருக்குங்
கைப்பொருளாகிய   கண்மணியானவள்

அம்பர்க்கருள் புரியமதவள் விற்பன்னர் விடாய்தீர்ப்பவள் (ஆ)

முல்லையரும்புக்குப்பல்லுநிகர்க்குமேடையே   யவள்
முகமும்வெண்டிங்கட்குமேலாய்விளங்குங்காணையே

சொல்லுக்குட்சிக்கிவகல்லுங்கரையுங்காணேயே யவள்
சுரத்திற்குக்கோகிலந்தோற்றிடுமென்பர்காணேயே
மெல்லநகுமுகமும் வீறும்விசுவாசமும்
நல்லகுணமுமபி நயமுஞ்சாதத்தினி
லெல்லாவகைகளுமேதெளிந் துல்லாசமு முளவரானவள் (ஆ)
குலுக்குநடையென்னமலுக்கித்தள்ளுங்காணேயே யவள்
கூர்விழியம்புதைத்துருகுமென்னெஞ்சில்காணேயே
கலிக்கிப்புதுமைபோல்காட்டிமறைப்பள்காணேயே யவள்
கருத்தமிர்தத்தைக்கடிந்திடுமென்பர்காணேயே
அலுக்கரதிகேளியி லானந்தமாய்மதன்
கலைக்குட்படியுண்டான கலைவிகள்வளர்த்தியே
கலுக்கென்றவள் நகைக்கும்ஒயில் பலுக்குங்குர லிசைக்குமியல்()

பொது விருத்தம்.

தேடிவந்துதன்மனைவியைச் சிக்கெனக்கண்டு
கூடிமெத்தவுங்கோபமுற் றடித்திடநினைத்து
ஓடிபோடியேவசைத்துப் பின்னுருட்டிகண்விழித்து
நாடிநாடியேகோபமாய் நவிலுகின்றனனே.

சிங்கன்சொல்-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

அடியெங்கடிப்போனாய் - குறத்திநீ
அடியெங்கடிப்போனாய்

சரணங்கள்.

அடிஎங்கடிப்போனாய் பொடிமாயக்காரிநீ
துடியிடையாளேநான் விடுவேனோதுடராமல் (அடி)
மன்னிமன்னிக்கொண்டு பின்னேபின்னேபோறாய்
கன்னக்குறத்திநீ யென்னத்துக்கஞ்சுவாய் (அடி)
ஒயிலாகவேகினம்போல் நயமாகநடக்கின்றாய்
குயிலேநீவாய்திறந் தியலாகவுரையடி (அடி)
இன்னேரம்வருவாயென் றெதிர்பார்த்திருந்தேநான்
பொன்னாளேவாராத போக்கென்னசொல்லடி (அடி)

இதுவுமது சீசபத்தியம்-இராகம்-தோடி.

மதியினைநின்முக வரசுகால்வாட்டியே
வான்புகதுரத்திய வனிதையாரோ
மதுகரங்களையெலாம் மறுட்டிநின்பின்னகம்
வனத்திடைதுரத்திய வஞ்சியாரோ
அதியநடையினா லதட்டியஞ்சங்களை
யயனிடத்தேகவிட் டரிவையாரோ
வெதிரிலாநின்குர லிசைப்பிகக்குலங்களோ
டெதிர்த்துதோர்ப்பிக்கு நல்லின்சொலாரோ

யென்னகாரணத்தாலே யின்னேரமாக
தன்னையறியாதசன்னதஞ் சார்ந்திருந்தாய்
உன்னைப்பிரிந்துநா னொருநாழியிருந்திலேனே
சொர்ணமேனியினளே நீசொல்லுவாயே.

தற்கம்-கண்ணிகள்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

(சிங்க) எந்தெந்ததேசங்களுக் கேகினையோபெண்ணே நீ
யென்னவதிசயங்கள் கண்டனையோ
(சிங்கி) இந்தவுலகங்களுக் கீசனிறையாகவு
மிசைந்தமந்திரியரியா யிருக்கக்கண்டேன்
(சிங்க) அரசரமைச்சரையு மறிவினற்கண்டேனென்று
மதிகாரஞ்செலுத்த வின்னமாரைக்கண்டாய்
(சிங்கி) ஆனைமுகனேட்போலீஸ் அதிகாரஞ்செய்யக்கண்டே
னறுமுகன்சேனாபதி யாகவிருக்கக்கண்டேன்
(சிங்க) போலீசதிகாரங்கள் பொருந்தச்செய்வதற்காக
புகலுமேவலாளர்க ளாரார்கண்டாய்
(சிங்கி) கோலதுற்கோணுகைக் கூட்டக்காரர்முதலாய்
கூடியேவல்கள்செய்யுங் குறிப்டைக்கண்டேன்
(சிங்க) சேனாபதியென்றொரு சேதசொன்னாய்பெண்ணே நீ
சிரானசதுரங்க சேனையார்கண்டாய்
(சிங்கி) வானோர்களுமெண்டிசை பாலகர்களும்பூத
மாகணங்களும்மணி வகுப்பாய்க்கண்டேன்
(சிங்க) கீர்த்திமிகுந்தபனைப்பாகை நகர்முதலாய்
கிராமாதிபத்தியங்க ளாரார்கண்டாய்
(சிங்கி பூர்த்தியாயெவ்வூர்கட்கும் பூதேசர்சிவனரியாய்
பொருந்தியிருக்கக் கண்டேன்புண்ணியனே

சிங்கன்சொல்-விருத்தம்.

மாதுகண்மணியேநாளும் மாமுனிவோர்களோதும்
நீதிநூலதனிலுள்ள நிச்சயப்படியேயிந்தப்
பூதலம்புரப்போர்தங்கள் புகழெலாமெடுத்துரைத்தாய்
தீதிலாதின்னேரம்நீ சென்றிடமுரைத்திடாயே

சிங்கி சிங்கன்சொல்-சிசபத்தியம்-இ-ம்-தோடி.

மன்னனேகேளுநான் வராதிபக்கல்போய்
சொன்னேனுன் குறிகளைச்சுசமதாக
என்னதான்சொன்னது மிப்படியெந்தனுக்
குன்னிடத்திறமைய யுள்ளதாக
இன்னிலம்க்ஷேமமாயிருக்கும்படிக்குநான்
மன்னித்துமழைபெய்ய வகுத்தேனுண்மை
சொன்னதாலிம்மழை சொரிந்துபூமிகளெலாம்
நன்றதாயிருப்ப துன்னாலேதானே
வாரும்மனம்பொறு மென்மீதில்மகிழ்வுகூறும்
காரும்பனைப்பாகை நகர்மேவுங்கர்த்தனோ

சீருஞ்செல்வமும் பெருகிவாழ்தெரிவையேநீ
காருப்பூவும்போ லேகுவோம்நடந்துவாடி

சிங்கன்சொல்-விருத்தம்.

கன்னியேசொல்லக்கேளாய் கறிக்கொன்றுமில்லைகண்டாய்
மின்னும்பூம்வனத்தில்வேட்டை வீறுடனடிக்கொண்டு
பன்னும்நாவலர்க்கோர்பாகம் பங்கிட்டுத்தந்துபின்னர்
தன்னிகரிலாதநல்லத் தனிநகர்க்கேகுவோமே

பொதுவிருத்தம்.

உலகினைமருட்டியாட்டு முபாயமென்கன்னிநாட்டி
சலனமுண்டானமாய்கை தனைவலையாகப்பூட்டி
இலகுநல்லாசைபென்னு மியலுளப்பரிகளோட்டி
கலிகொள்நானென்னும்புள்ளை நாடியேபிடிக்கின்றாரே

சிங்கன்வேட்டையாடுகிற தரு-இ-ம்-சௌராஷ்டகம்-அடதாளம்.

பல்லவி

ஏகுதுதடையே பறவைக
ளேகுதடையே

சரணங்கள்.

வாகுடையநல்லவக்காபக்கியும் மன்னுஞ்சுருக்குரிமின்னும்புருக்குரி
வளமுற்றது-கிளைவித்தது-தளைதத்தியே யுலவித்தது (ஏகு)
தூக்குருவியுமூக்குருவியுஞ் சூக்காட்டியுள்ளானுஞ் சுகஞ்சகோரமும்
துரிதத்துடன்-வரிதத்துபின்-பொருதுற்றது-கருதித்தனித் (ஏ)
காடைகவுதாரியுங்கருக்குருக்களுங்கடிநெடிதானகருஞ்செங்காநாரை
யும்,கட்டுஞ்சிறு.மைநாக்குரு-புட்டங்கியும்-பொன்னாங்குரு (ஏகு)
கேகையுந்தோகையுந்டேகையுங்கூடியே கிட்டக்கிட்டவந்துவட்டவ
ட்டமாக,கிறுக்கென்றது-பறக்கின்றது-சுறுக்கன்றியிலிருக்கின்றது

பொதுவிருத்தம்.

பக்கியைப்பிடித்தனேக பாரசிக்கத்திற்போட்டு
சிக்கெனச்சிங்கிதன்னை சிருடனழைத்துக்கொண்டு
சக்கரைப்பந்தலிற்றேன் சரமாரிபொழிந்தாற்போல
அக்கரையாகத்தங்க ளரண்மனைக்கேகினாரே.

சிங்கன்சொல்-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்,

பல்லவி,

வாடிமனைக்கேகுவோம்பெண்மயிலே எந்தன்
மனதுக்கிசைந்தநல்ல கண்மணியே.

சரணங்கள்,

வாடிமனைக்கேகுவோம் தேடித்திரிந்தவுனை
நாடிவிடாய்தீர்ந்தேனான் கூடிக்குலாவியிப்போ (வா)
அழகால்மிகுந்தரதிக் கதிகவடிவுடைய
மழைகுழலாளேயுனை மறந்திருக்கமாட்டேனான் (வா)
பதினெண்குலத்தோர்க்குப் பலருந்தழைத்திடச்

இலக்ஷணக்குறவஞ்சி.

சதிராயுனைப்போலொரு சமர்த்தியுமில்லைகண்டாய் (வா)
மங்களப்பனப்பாகை மாநகரினில்மேவி
தங்கியிருந்திடுவோர் தாட்சிகளொன்றிலாமல் (வா)

பொது எழுசீரடி விருத்தம்.

விண்ணவர்கோன்முதலாகவெல்லாங்கூடி விரைசெறிகற்பகத்தருப்பூமாரிபெய்ய, தண்ணருந்தாமரையானைதடக்கையாலேதழுவியணைந்தேழுத்தந்தந்தேபின்னும், கண்ணனுநான்மறைபோற்றக்கடிந்தோர் வாழ்ந்தக்கலைகளெலாந்துதிக்கவெகு காட்சியாக,மண்ணுலகோர்புகழ்கொள்பனப்பாகை மேவிவந்திட்டாரெவர்க்கும்வரந்தந்திட்டாரே.

வாழிவிருத்தம்.

அருட்கணுலையனேயிவ்வுலகோர்வாழ்க அருமறைகள்வாழ்கவடியேனும்வாழ்க, பொருளுணர்ந்தேகவிமதுரம்பொழியப்பாடும் புலவோர்கள்நின்னடியைப்போற்றிவாழ்க, தெருட்குணவிசரஸ்வதாதேவிராஞ் சீராகவெங்காவில்பேவிவாழ்க, இருட்கலியைத்தீர்க்குநல்லறங்கள்வாழ்க வெழில்பனப்பாகைநகரும்வாழ்கவாழ்க.

இதுவுமது.

மதியுலாம்வேணிகங்கையாடனக்கு மலர்மகளுரைத்தவிச்சரிதை
பதியெலாமோங்கவூதறிவோர்கள் பகர்பனப்பாகையுண்மேவுந்
துதிகொள்செக்குந்தர்மணியென வுதித்ததூய்முனியப்பனுமன்னோன்
விதிதவத்துற்றசிதம்மரவள்ளல் விரிஞ்சனைப்போலவாழியவே.

மங்களம்-இ-ய-சுருட்டி-அடதாளம்பல்லவி.

மங்களம் மங்களம்—ஜெயஜெய மங்களம்மங்களம்.

சரணங்கள்.

மங்களங்கங்காளிசூலி வானவர்தொழுங்கபாலி
சங்கரிகூபரிபாலி சாம்பவிகௌமாரிநீலி
சாதனத்தொடுநின தமகிழ்வுறு பாதபங்கயமதனைநாடியே
போதவேபணிந்தேத்துவோர்களை யாதரித்திடுந்தாய்தனக்குமே(மங்)
இந்துவைச்சூடியவேணி யிசையாழ்தரித்தபாணி
கந்தனையீன்றசர்வாணி காளியேமவதியார்யாணி
கருணைபொழியிருமிருகவிழியின ளறுகுயானனமூறுமாம்பிகை
தாணிதரமகிழ்வுற்றுதந்தநல் லருணதேசமிகுக்குமாய்க்குமே (மங்)
மறைமுதலியவோங்காரி மகிடாசூரசங்காரி
இறையெனவெழுமாங்காரி யேகதுரந்தரிசிரிங்காரி
இலகுசு ரெனபுலவர்மனதினி லேகிவல்வினையிருளகற்றியே
அலகிலா வகுபுகழுமோக்ஷமு மருளியாண்டிடுமாய்தனக்குமே (மங்)
புகழோங்கும்பனப்பாகை புரவலரீசர்பாகத்
திகழ்விளங்கும்போகத் தெண்மணிசவுந்திரதோகை
திகிரியேந்தியேவசுரர்குலமத மகலவேயறுத்தமரருளமது
மகிழவேயருள்புரியுநெடுமால் வண்மைசோதரியானவட்குமே(மங்)

இலக்ஷணக்குறவஞ்சி
முற்றிற்று.